

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள் 1

## கண்ணியமிக்க இரவு

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்).

நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர்) என்ற இரவில் இறக்கினோம். மேலும் கண்ணியமிக்க இரவு என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது? கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும். அதில் மலக்குகளும், ஆன்மாவும் (ஜிப்ரீலும்) தம் இறைவனின் கட்டளையின் படி (நடைபெற வேண்டிய) சகல காரியங்களுடன் இறங்குகின்றனர். சாந்தி (நிலவியிருக்கும்); அது விடியற்காலை உதயமாகும் வரை இருக்கும்.

அல்குர்ஆன் 97:1-5

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள் 2

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள்

(வணக்க வழிபாடுகளில்) மற்ற நாட்களில்

காட்டாத (அதிக) ஈடுபாட்டை, (ரமளானின்)

இறுதிப்பத்து நாட்களில் காட்டுவார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், முஸ்லிம் 2185

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள் 3

(ரமளான் மாதத்தின்) இறுதிப்பத்து (நாட்கள்) துவங்கிவிட்டால், அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் (வணக்க வழிபாட்டின் மூலம்) இரவுகளுக்கு உயிரூட்டுவார்கள். (வழிபாட்டில் ஈடுபடுவதற்காக) தம் துணைவியரையும் விழிக்கச் செய்வார்கள். (வழக்கத்தைவிட அதிகமாக வழிபாட்டில்) அதிகக் கவனம் செலுத்துவார்கள். தமது கீழாடையை இறுக்கிக் கட்டிக் கொள்வார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2184

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள்

4

## இஃதிகாஃப்

நபி (ﷺ) அவர்கள் ரமளான் மாதத்தின் இறுதிப்பத்து நாட்களில் ’இஃதிகாஃப்’ இருந்து வந்தார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2178

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள்

5

## லைலத்துல் கத்ர்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

யார் ‘லைலத்துல் கத்ர்‘ எனும் மகத்துவ மிக்க இரவில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நின்று வழிபடுகிறாரோ அவருடைய முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்., புகாரி 1901

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள்

6

## லைலத்துல் கத்ர்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

அந்த (லைலத்துல் கத்ர்) இரவைத் தேடுபவர் ரமளானின் இறுதிப்பத்து இரவுகளில் (ஒன்றில்) தேடட்டும்!

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2165

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள்

7

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் உள்ள ஒற்றைப்படை இரவுகளில் லைலத்துல் கத்ரை தேடிக்கொள்ளுங்கள்!

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புகாரி 2017

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள் 8

## லைலத்துல் கத்ரின் அடையாளம்

அன்றைய (லைலத்துல் கத்ருடைய)

நாளில் (காலையில்) சூரியன்

சுடரின்றி உதிக்கும் என நபி (ﷺ)

அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பாளர்: உபை இப்னு கஃப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2175

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள்

9

## லைலத்துல் கத்ரின் அடையாளம்

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுக்கு அருகில் 'லைலத்துல் கத்ர்' இரவு பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அவர்கள், 'உணவுத் தட்டின் பாதித்துண்டைப் போன்று நிலா தோன்றும் இரவே (லைலத்துல் கத்ர்) ஆகும் என்பதை உங்களில் நினைவில் கொள்பவர் யார்?' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2177

# ரமளானின் இறுதிப்பத்து நாட்களின் சிறப்புகள் 10

## லைலத்துல் கத்ர் இரவில் ஓதுமாறு நபி(ﷺ) அவர்கள் ஆயிஷா(ரலி) அவர்களுக்கு கற்றுத் தந்த துஆ

اَللَّهُمَّ إِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّي

அல்லாஹும்ம இன்னக்க அபு(ஃ)வ்வுன் துஹிப்புல் அப்(ஃ)வ ப(ஃ)ஃபு(ஃ) அன்னீ

இறைவா! நீ மன்னிப்பவன். மன்னிப்பையே விரும்புபவன். எனவே என்னுடைய பாவங்களை மன்னித்தருள்வாயாக!

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், அஹ்மத் 25168, இப்னுமாஜா 3850, திர்மிதீ: 3513